பக்கங்கள்:-17


காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 31 | புதன்கிழமை | 14.02.2024 | அதிர்வு 197

## சுகாதார தொழிற்சங்கங்கள் இன்றும் பணிப்புறக்கணிப்பு

வைத்தியர்கள் தவிர்ந்த 72 சுகாதார தொழிற்சங்கத்தினர் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்பு இன்றும் தொடரவுள்ளது.

தமக்கான உரிய தீர்வு முன்வைக்கப்படும் வரையில் தொடர்ச்சியான 06



# தமிழ் மக்களுடன் கனடா இணைந்து பயணிக்கும்

## சிறீதரனிடம் தூதுவர் நேரில் உறுதி

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களுடன் கனடா என்றும் இணைந்து பயணிக்கவே விரும்புகின்றது என்று இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ் தெரிவித்தார்.

இலங்கைக்கான கனேடியத் தூதரகத்தின் அழைப்பின் பேரில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று கனேடியத் தூதுவரைக் கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே தூதுவர் மேற்கண்டவாறு கூறினார் என்று சிறீதரன் எம்.பி. தெரிவித்தார். 06

## சுகாதார சேவையுடன் தொடர்புடைய பல சேவைகள் அத்தியாவசியமாகின

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு



நாட்டில் வைத்தியர்கள் தவிர்ந்த 72 சுகாதார தொழிற்சங்கத்தினர் முன்னெடுக்கும் பணிப்புறக்கணிப்பையடுத்து சுகாதார சேவைகளுடன் தொடர்புடைய பல சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 06




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகிகள் தெரிவு விவகாரம் – சர்ச்சை – சுமுகமாகத் தீர்க்கப்பட்டது போன்ற செய்திகள் வெளியான போதிலும், நிலைமை அப்படி இல்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

நீறு பூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கும் இந்த விடயம் வரும் 19ஆம் திகதி – திங்கட்கிழமையன்று – காலையில், திருகோணமலையில், கட்சியின் 06

## டயானா கமகே விவகாரம்:

# மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை நிறைவடைந்தது



இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பான மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்ததை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு மீதான விசாரணைகள் நேற்று உயர் நீதிமன்றத்தில் நிறைவடைந்தன.

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் காமினி அமரசேகர, குமுதினி விக்கிரம சிங்க மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் மேன்முறையீடு விசாரணைக்கு வந்தது.

விசாரணையை முடித்த உயர்நீதிமன்றம் தீர்ப்பை காலவரையறை குறிப்பிடாது ஒத்திவைத்தது.

இராஜாங்க அமைச்சரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மற்றும் பிரஜாவுரிமைக்கு எதிராக தாம் தாக்கல் செய்த மனு மேன்முறையீட்டு நீதி மன்றத்தினால் நிராகரிக்கப்பட்ட இரண்டு வாரங்களின் பின்னர் சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் இந்த மேன்முறையீடுகளை முன்வைத்திருந்தார்.



# போதைப்பொருளுக்கு எதிராக யாழ். நகரில் நேற்று போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

போதைப்பொருளுக்கு எதிரான போராட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

“போதைப்பொருள் பெருந்தீமையிலிருந்து எம்மையும், எமது சந்ததியினரையும் பாதுகாப்போம்” எனும் தொனிப் பொருளில் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலை யத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட சர்வ மதப் பேரவையின் ஏற்பாட்டில் மேற்படி போராட்டம் இடம்பெற்றது.

இதில் யாழ் மாவட்ட சர்வமதப் பேரவையின் தலைவர் சிவஸ்ரீ கிருபானந்த குருக்கள், செயலாளர் அருட்பணி இ.ராஜ்குமார், யாழ்ப்பாணம் நாக விகாரையின் விகாராதிபதி ஸ்ரீவிமல தேரர், மௌலவி வி.ஏ.எஸ்.சுபியான் உள்ளிட்ட மதத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.










# யுவதி மீது பாலியல் துஷ்பிரயோகம் புரிந்த பொலிஸ் அலுவலருக்கு ஏழு வருடச் சிறை

## நுவரெலியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு




திருமணம் ஆகாத 35 வயதுடைய பெண் ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவருக்கு ஏழு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை மற்றும் 20 ஆயிரம் ரூபா தண்டப்பணத்துடன் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 5 லட்சம் ரூபா நஷ்டஈட்டுத் தொகை வழங்க வேண்டும் என நுவரெலியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்தத் தீர்ப்பை நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரிய நேற்றுப் பகல் வழங்கினார்.

கந்தப்பளை ஹைபொரஸ்ட் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தராகக் கடமையாற்றிய லக்ஷ்மன் சாலிய பண்டார வீரசிங்க என்பவர் கடமை நேரத்தில் 35 வயதுடைய திருமணமாகாத பெண் ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு எதிராக கடந்த 2019 ஆண்டு நுவரெலியா மேல் நீதி மன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தது.

கடந்த ஐந்து வருடங்களாக விசாரணை செய்யப்பட்டு வந்த இந்த வழக்கின் சாட்சியங்களின் அடிப்படையில் பொலிஸ் உத்தியோகஸ்தரான லக்ஷ்மன் சாலிய பண்டார வீரசிங்க நுவரெலியா மேல் நீதி மன்றத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு அவருக்கான தண்டனைத் தீர்ப்பை மேல் நீதிமன்ற நீதபதி விராஜ் வீரசூரிய நேற்று வழங்கினார்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 05 லட்சம் ரூபா நஷ்டீட்டுத் தொகை வழங்காத பட்சத்தில் மேலும் மூன்று வருடச் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டார்.



# போதைப்பொருளுடன் சிக்கிய பெண்ணை விடுவிக்கக் கோரி பொலிஸ் மீது தாக்குதல்

## மூன்று சகோதரிகள் உட்பட 4 பேர் கைது

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட பெண் ஒருவர், புறக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் அவரை விடுவிக்குமாறு கூறி பொலிஸாரைத் தாக்கிய சந்தேக நபரின் மூன்று சகோதரிகள் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நால்வரும் கொழும்பு மருதானை பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரதான சந்தேக நபரான பெண்ணிடம் இருந்து 600 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 200 மில்லிகிராம் ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் நாராஹேன்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பில் கைது செய்யப்பட்ட மற்றுமொரு சந்தேக நபர் இந்தக் களேபரத்தின் போது பொலிஸ் பாதுகாப்பில் இருந்து தப்பிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



# கச்சதீவு திருவிழாவில் கலந்து கொள்வோர் தமது உணவைத் தாமே எடுத்து வர வேண்டும்

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவில் இம்முறை இலங்கையைச் சேர்ந்த 4 ஆயிரம் பேர் மாத்திரமே கலந்துக் கொள்ள உள்ளனர் எனவும், திருவிழா விற்கு வருகை தரும் பக்தர்களுக்கு உணவு வழங்கப்படாது என்பதால், தேவையான உணவுகளை அவரவர் களே எடுத்து வர வேண்டும் எனவும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாதசுந்தரம் வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

யாழ் குறிக்கட்டுவான் படகுத்து றையில் இருந்து திருவிழா வில் கலந்துக்கொள்ளும் பக்தர்களுக்கான படகு சேவைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி அதிகாலை 5 முதல் மதியம் 12 மணி வரை நடத்தப்படும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கச்சத்தீவு வரை பயணிக்க ஒருவரிடம் 150 ரூபா அறவிடப்படும்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து குறிக்கட்டுவான் படகுத்துறை வரை பயணிக்க 100 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளன. 15 நிமிடங்க ளுக்கு ஒரு முறை பஸ்கள் இயக்கப்படும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நடைபெறும் கச் சதீவு புனித அந்தோனியார் தேவா லயத்தின் திருவிழாவில், 4 ஆயிரம் இலங்கையர்கள் மற்றும் 4 ஆயிரம் இந்தியர்கள் என 8 ஆயிரம் பேர் வரை மாத்திரமே கலந்துக்கொள்வார்கள்.

திருவிழா முடிவடைந்த பின்னர், அதில் கலந்துக்கொண்ட பத்தர்கள் அனைவரும் 24 ஆம் திகதி மதியம் 12 மணிக்குள் கச்சதீவில் இருந்து புறப்பட்டுச் செல்ல வேண்டும் எனவும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியுள் ளார்.

மேலும் கச்சதீவு புனித அந் தோனியார் தேவாலய திருவிழா என்பது சிறப்பு திருப்பலி பூஜை என்பதால், அதில் கலந்துகொள்பவர் கள் மதுபானம் அருந்தி இருக்கக் கூடாது என்பதுடன் மதுபானங்களை எடுத்து வரவும் தடைவிதிக் கப்பட்டுள் ளது.

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயம் யாழ் மறை மாவட்டத் திற்குரிய தேவலாயம் என்பது குறிப் பிடத்தக்கது.

# இரண்டு குழந்தைகளுடன் எதியோப்பியப் பெண் கைது

கண்டியைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் முடித்து விசா இன்றி கண்டி யில் வாழ்ந்த எதியோப்பிய பெண் ஒரு வரும் அவருடைய இரு குழந்தைகளும் விசா காலாவதியாகியதன் காரணமாக கைது செய்யப்பட்டனர்.

இலங்கையில் உள்ள ஒருவரை இரு குழுந்தையுடன் எதியோப்பியா விலிருந்து வந்து திருமணம் முடித்து கண்டி அம்பிடிய பகுதியில் வாழ்ந்த நபர்களே கடவுச்சீட்டுடன் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது குறித்த பெண் ஏற்கனவே எதியோப்பியாவில் ஒருவரை திருமணம் முடித்த நிலையில் அவருக்கு இரு பிள்ளைகள் இருக்கின்றனர் என தெரியவந்துள்ளது.



இக்குழந்தைகளுடனேயே இலங்கை யில் ஒருவரை மறுமணம் செய்து அம் பிடியவில் வாழ்ந்து வருகிறார். இந்த வருடம் அவரது வீசா ஜனவரி மாதம் 17ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.

இலங்கையில் எதியோப்பிய தூத ரகம் இல்லாததால் கண்டி உல்லாச பயணிகளுக்கான பொலிஸ் பிரிவினர் இந்தியாவிலுள்ள எதியோப்பிய தூ துவருக்கு நேற்று செவ்வாய்க்கிழமை இது பற்றி அறிவித்துள்ளனர். இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.



# சுங்க அனுமதியின்றி எடுத்து வரப்பட்டனவாம் ரூ. 15 கோடி பெறுமதி ஆடைகள் பறிமுதல்!



சுங்கப் பிரிவின் அனுமதியின்றி கொள்வனவு செய்யப்பட்ட 15 கோடி ரூபா பெறுமதிமிக்க ஆடைகள் இலங்கை சுங்கத்தின் சுங்க வருவாய்க் கண்காணிப்புப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மலேசியாவிலிருந்து நாட்டிற்கு வந்திருந்த சந்தேகத்துக்கிடமான 4 கொள்கலன்கள் ஒருகொடவத்தை பகுதியில் உள்ள பொருள்கள் ஏற்றி இறக்கும் முனையத்தில் சுங்கப் பிரிவினரால் தடுத்து நிறுத்தப்பட்டு நேற்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது கொள்கலன்களில் பிரபல நிறுவனம் ஒன்றிலிருந்து சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ஆடைகள் கொள்வனவு செய்யப்பட்டு சுங்க வரி செலுத்தாமல் நாட்டிற்குள் கொண்டுவரப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதாக சுங்க வருவாய்க் கண்காணிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

உரிமையாளர் சுங்கத்திற்குச் சமர்ப்பித்த அனைத்து ஆவணங்களிலும் துணிவகைகள் மாத்திரம் கொள்வனவு செய்வதற்காகத் தெரிவித்து ஆடைகளைக் கொள்வனவு செய்துள்ளமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட ஆடைகளின் பெறுமதி சுமார் 15 கோடி ரூபா என சுங்கப் பிரிவினரால் மதிப்பிடப்பட்டுள்ளது. இவை சந்தைக்கு விடுவிக்கப்பட்டிருந்தால் சுங்கப் பிரிவினருக்கு சுமார் ஆறு கோடி ரூபா நட்டம் ஏற்பட்டிருக்கும் எனவும் சுங்க வருவாய் கண்காணிப்புப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

ஆடைகளைக் கொள்வனவு செய்த உரிமையாளர் மற்றும் கைப்பற்றப்பட்ட ஆடைகள் தொடர்பாகச் சுங்கப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழ்.போதனாவில் 47 குழந்தைகள் சாவு

## கடந்த வருடம் மாத்திரம்



யாழ்ப்பாணம் போதனா வைத்திசாலையில் கடந்த ஆண்டு 47 குழந்தைகள் இறந்து பிறந்துள்ளன என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ். போதனாவில் கடந்த ஆண்டு 5 ஆயிரத்து 510 குழந்தைகள் பிறந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் நிமோனியாவால் பாதிக்கப்பட்ட 1,052 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த வருடம் சிகிச்சை பெற்ற நிலையில், அவர்களில் 238 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மாநாட்டுக்கு முன்னர் பொதுக்குழு கூடும்போது, சுவாலை விட்டு விளாசி எரியும் என்றும் செய்திகள் கசிந்துள்ளன.

செயலாளர் பதவியை சிறீதரன் அணியின் தரப்புக் கைப்பற்றி உறுதிப்படுத்தும் வரை சர்ச்சை தொடரும் என்றால், மீண்டும் மாவை காட்டில் மழை என்பதுதான் நிலைமையாகும்.

'எல்லாத் தரப்புகளையும் சமாளித்தல்' என்ற சிறீதரனின் தத்துவம் கடைசியில் 'மட்டக்களப்பைச் சமாளித்தல்' என்ற கதையாகவே முடியும் போல தெரிகிறது.

கடந்த பதினோராம் திகதி வவுனியாவில் சிறீதரன் தரப்புப் பிரமுகர்கள் கூடி நடத்திய மந்திராலோசனையின் பின்னர் விவகாரம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு விட்டதாக முன்னாள் பதில் பொதுச் செயலாளர் டாக்டர் சத்தியலிங்கமும், புதிய பொதுச் செயலாளராகத் தாமே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்று நம்பிக் கொண்டிருக்கும் குகதாசனும் அங்கிருந்து திருப்தியுடன் புறப்பட்டுச் சென்றனர்.

ஆயினும், வரும் திங்கட்கிழமை காலை பொதுக்குழுக் கூட்டம் அவர்களுக்கு அதிர்ச்சி அளிப்பதாக அமையும் சாத்தியங்களே அதிகம் தென்படுகின்றன.

இதற்கிடையில் தேசிய அரசியல் விவகாரமும் உட்கட்சி அரசியலுக்குள் புகுந்து விளையாடுவதாக சில செய்திகள் கசிந்துள்ளன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலம் முதல் தமிழ்த் தேசிய தரப்பில் அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் போட்டுப் பிடித்து வருபவர்கள் இருவர். ஒருவர் – சாணக்கியன். மற்றவர் – சுமந்திரன். ஜனாதிபதி ரணிலைக் கடுமையாக எதிர்க்கும் – விமர்சிக்கும் – தமிழ் தலைவர்கள் என்று தென்னிலங்கை மக்களால் பார்க்கப்படுபவர்கள் இவர்கள் இருவரும்தான்.

தமிழரசுக் கட்சியின் உள்கட்சித் தேர்தல்களில் இவர்கள் இருவரும் ஓரங்கட்டுப்பட்டு விட்டனர் என்று வெளியாகும் செய்தி ரணில் தரப்பை புளகாங்கிதமடைய வைத்திருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் திருப்தி கூறுகின்றன.

தமிழரசுக் கட்சித் தலைவர் தெரிவுக்கு முன்னரே அதில் சில 'புலம்பெயர்' தமிழ் பெரு முதலாளிகள் – முதலைகள் – நிதி ரீதியாகச் சம்பந்தப்பட்டமை பற்றிய பலத்த பேச்சுக்களின் பின்னணியில் ஜனாதிபதி ரணிலின் நேரடி ஆசீர்வாதமும் இருந்தது, வழமை போல கட்சியின் இந்தப் பிளப்பின் பின்னணியிலும் அவரின் நரித்தன மூளையும் சம்பந்தம் என்றெல்லாம் கூறப்பட்டாலும், அவற்றை ஊர்ஜிதப்படுத்தும் உறுதியான ஆதாரத் தகவல்கள் இல்லை. அதனால் வெறும் ஊகத்தில் அப்படிப் பேசுவது மட்டும் தான் முடியும்.

ஆயினும் இப்போது கட்சிக்குள் சுமந்திரன் – சாணக்கியன் அணி ஓரங்கட்டப்பட்டதில் ஜனாதிபதி ரணில் தரப்புக்கு மிக்க மகிழ்ச்சி என்று தெரிகின்றது.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வாக்குகளை – தமிழ்த் தேசியக் கட்சிகளை – தமக்குச் சாதகமாக வளைத்து போடுவதில் தங்கள் தரப்புக்கு இருக்கக்கூடிய முக்கிய இடைஞ்சல்களை மலினப்படுத்தி, செயலிழக்க வைத்துவிட்டதான திருப்பி ரணில் தரப்புக்கு இப்போது.

அதற்காக, சுமந்திரன் அணியைப் பலவீனப்படுத்தியவர்கள் என்று தான் கருதும் தரப்புக்கு வெகுமதி அளிக்கவும் அதிகாரத் தரப்பு பின்னிற்கவில்லை.

முன்னர் ராஜபக்ஷக்கள் ஆட்சியில் பஸில் வழங்கிய பரிசுமழை முன்மாதிரி தான் அது.

ஒவ்வொரு தமிழ் எம்.பிக்கும் அவரது மாவட்டத்தில் அவர் குறிப்பிடும் 5 கோடி ரூபாத் திட்டத்தை வருட ஒதுக்கீட்டில் கவனித்து, அங்கீகரிக்கும்படி அதியுத்தமர் உத்தரவிட்டிருக்கின்றார் என்று தெரிகின்றது. அவர்கள் காட்டில் நல்ல மழை. நடக்கட்டும் விருந்து.

இன்று இப்பத்தியின் ஆரம்பத்தில் மாவை காட்டில் நல்ல மழை என்றேன். அதற்குக் காரணம் உண்டு.

கைக்கெட்டியது சிலருக்கு வாய்க்கு எட்டாமல் போகும். மாவையைப் பொறுத்த வரை கைநழுவியது, மீண்டும் தேடி வந்து மடியில் வீழும் நிலைமை என்று ஆருடம் கூறுகிறேன்.

'பழி ஓரிடம், பாவம் ஓரிடம்' என்பார்கள். பாவம் சுமந்திரன். பழியையும் பாவத்தையும் அவரே சுமக்க வேண்டி வரும் – அவர் செய்யாத விடயத்துக்காக.

விரைவில் அந்நிலைமை வரும் போது அது பற்றி விவரமாகப் பார்ப்போம்.

## சுகாதார தொழிற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

நேற்று மாலை நடைபெற்ற கலந்துரையாடலின்போது, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று அதன் இணைப்பாளர் சானக்க தர்மவிக்ம தெரிவித்தார்.

72 சுகாதார தொழிற்சங்கங்களைச் சேர்ந்த சுகாதார பணியாளர்கள் நேற்றுக் காலை 6 மணிமுதல் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்து வருகின்றனர்.

வைத்தியர்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள 35 ஆயிரம் ரூபாய் மேலதிக கொடுப்பனவு, தமக்கும் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி மேற்படி 72 சுகாதார தொழிற்சங்கங்கள் பல தடவைகளில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தன.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன், சுகாதார தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மேற்கொண்ட பேச்சில் இணக்கம் ஏற்படாத நிலையில், மீண்டும் பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

## சுகாதார சேவையுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இந்த விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, மருத்துவமனைகள், நேர்சிங் ஹோம்கள், மருந்தகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் நோயாளிகளின் பராமரிப்பு, வரவேற்பு, பாதுகாப்பு, போசனை ஊட்டல் மற்றும் சிகிச்சை தொடர்பாக தேவைப்படும் அல்லது செய்ய வேண்டிய அனைத்து சேவைப் பணிகள் அல்லது உழைப்பு அத்தியாவசிய சேவைகளாக அதிவிசேட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

## தமிழ் மக்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சந்திப்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், கனேடியத் தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் டானியல் வூட், அரசியல் அலுவலர் கணேசநாதன் சாகித்தியனன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமைக்காகச் சிறீதரன் எம்.பிக்கு வாழ்த்துத் தெரிவித்த கனேடியத் தூதுவர், ஈழத்தமிழர்களின் அரசியல் நலன் சார்ந்து முன்னெடுக்கவுள்ள செயற்பாடுகளுக்குத் தம்மாலான பங்களிப்பை வழங்கத் தயாராகவுள்ளார் என்றும் உறுதியளித்தார்.



# இலத்திரனியல் ஊடக ஒலிபரப்பு அதிகாரசபை சட்டத்தை நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகிறது

## வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தகவல்



**“இலத்திரனியல் ஊடக ஒலிபரப்பு அதிகார சபை சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற எதிர்பார்க்கின்றோம். தேசிய ஊடகக்கொள்கையொன்று முன்வைக்க எதிர்பார்க்கின்றோம். அது தற்போது அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.”**

**- இவ்வாறு வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

”இன்று நாம் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களில் ஒன்று வருமானம் மற்றும் செலவுகளை முகாமைத்துவம் செய்வதில் உள்ள பிரச்சினையாகும். அமைச்சின் கீழுள்ள 16 நிறுவனங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளோம். அவைகளில் பெரும்பாலானவை திறைசேரியையே நம்பியிருக்கின்றன. எனவே, இந்த நிறுவனங்கள் சுயாதீனமாக முன்னோக்கிச் செல்லும் வகையில் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

குறிப்பாக தேசிய ரூபவாஹினி மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னேற்றத்திற்காக நிர்வாகத்துடன் கலந்துரையாடி சில முக்கிய முடிவுகளை எடுத்தோம். இதன் மூலம் சாதகமான அணுகுமுறைகளைப் பெற முடிந்தது. சுயாதீன தொலைக்காட்சி மற்றும் லேக்ஹவுஸ் என்பன பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டன. அடுத்த ஆண்டுக்குள் அந்த நிறுவனங்களை இலாப மீட்டும் நிறுவனங்களாக மாற்ற முடியும் என்று நம்புகிறோம்.

மேலும், 2022 ஆம் ஆண்டு தபால் திணைக்களத்தின் வருமானம் 9,268 மில்லியன் ரூபா மாத்திரமே ஆகும். ஆனால் 2023 ஆம் ஆண்டு 13,616 மில்லியன் ரூபா வரை வருமானத்தைப் பெற முடிந்தது. பொதுமக்களுக்கு எந்தச் சுமையையும் ஏற்படுத்தாமல், சேவைகளை அதிகரித்தும், நிர்வாகத் தரப்பில் உள்ள குறைபாடுகளைக் குறைத்தும், எம்மால் அதை முறைமைப்படுத்த முடிந்தது. தபால் துறையின் 2021 ஆம் ஆண்டில் 7,173 மில்லியன் நட்டம் 2022 இல் 6,832 மில்லியனாக குறைந்தது.

ஆனால், 2023 இல் நட்டத்தை 3,222 மில்லியனாக மேலும் குறைக்க முடிந்தது. அதன்படி, 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்குள், திறைசேரியை நம்பி இல்லாத இலாபம் ஈட்டும் நிறுவனமாக தபால் திணைக்களத்தை மாற்ற முடியும் என்று நாங்கள் கருதுகிறோம்.

அத்துடன், தனியார் மற்றும் அரச கூட்டுத் திட்டமாக 10 பில்லியன் ரூபா விசேட வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதன் மூலம் உலகில் எங்கிருந்தும் பொருள்கள் பரிமாற்றத்தை மிக விரைவாக செய்ய முடியும். இந்த வருடம் மேல் மாகாணத்தில் 200 ஓட்டோக்கள், 50 மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்தி பொருள்களைப் பரிமாற்றிக்கொள்வதற்கான கூரியர் சேவையை ஆரம்பிப்பதற்கும் நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

மேலும், 100 தபால் நிலையங்களை உள்ளடக்கும் வகையில் இலங்கை வங்கிக் கிளையினால் மேற்கொள்ளப்படும் அடிப்படை வங்கிச் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் எதிர்பார்க்கின்றோம்.

மேலும், இலத்திரனியல் ஊடக ஒலிபரப்பு அதிகார சபைச் சட்ட மூலம் பெரும்பான்மை உடன்பாட்டின் அடிப்படையில் பாரிய மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டது. இறுதி சட்டமூலம் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகிறது.

ஊடகவியலாளர்களுக்கான பட்டய நிறுவனத்தை உருவாக்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் தற்போது தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் பூர்வாங்கப் பணிகள் நிறைவடைந்து சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களுக்கு முறையான பயிற்சியுடன் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழையும் வழங்க எதிர்பார்க்கிறோம்.

தேசிய ஊடகக் கொள்கையொன்றை முன்வைக்க எதிர்பார்க்கப்படுகிறது. அது தற்போது அமைச்சரவையின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் ஊடக செயற்பாடுகளுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்பட மாட்டாது என்பதையும் விசேடமாக குறிப்பிட வேண்டும்.” – என்றார்.

# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயம்!



கொழும்பு, மோதர பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அசையாது ஜனாதிபதி ஆட்சி

வருகின்றஜனாதிபதித்தேர்தலுக்குஇடமளித்தால் - அத்தேர்தல் உரிய காலத்தில் இடம் பெற்றால் - ஆட்சி மாற்றம் தவிர்க்க முடியாத கட்டாயமாக இருக்கும் என்று எண்ணி அவலப்படும் பொதுஜன பெரமுன - ஐக்கிய தேசியக் கட்சி கூட்டு, தேர்தலைக் குழப்பியடித்து, நிலைமைகளை இழுபடச் செய்வதற்கான பகீரதப் பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றது என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்த வருடம் வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டு, ஒரு தொகுதி வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்ட நிலையில், உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைத்த 'வெட்கம் கெட்ட' அரசியல்வாதிகள்தான் இன்னும் நாட்டை ஆளுகின்றனர்.

நாட்டின் அரசமைப்புப்படி ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கவே முடியாது. அதற்கான ஏற்பாடுகள், வாய்ப்புகள், ஒழுங்குகள் சட்டத்தில் இல்லவே இல்லை.

ஆனாலும் எந்த வழியிலாவது அதைச் செய்யும் - செய்ய முயலும் - கில்லாடித்தன அரசியல்வாதியின் கையில்தான் நாடும் அதிகாரமும் இன்று விழுந்து கிடக்கின்றன.

அதனால் அரசமைப்புக்கு முரணாக எதுவும் நடக்கலாம், எப்படியும் நடக்கலாம், எப்போதும் நடக்கலாம்...!

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான ஏற்பாடு ஏதும் அரசமைப்பில் இல்லாதமையால் இன்னும் ஏழு, எட்டு மாதங்களில் நடைபெற்றாக வேண்டிய ஜனாதிபதித் தேர்தலை ரணில் - மொட்டுக் கூட்டணி தள்ளிப் போடுவதாயின், அதற்கு அரசமைப்பில் மாற்றங்கள், திருத்தங்கள், சேர்க்கைகள் செய்யப்படுவது தவிர்க்க முடியாத கட்டாயமாகும்.

அத்தகைய திருத்தம் ஒன்றைத்தான் 'நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழித்தல்' என்ற பெயரில் அரசமைப்புக்குள் நுழைக்கும் தந்திரத்தை ரணில் தரப்பு கையில் எடுத்திருக்கின்றது.

ஆனால் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைமைஎன்பது அரசமைப்பின்அடிப்படை - பிரதான - ஏற்பாட்டுடன் தொடர்புபட்ட முக்கிய அம்சம் என்பதனால் அந்த மாற்றத்தைச் செய்வதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்கள் அனுமதியையும் பெற வேண்டும் என்று உயர்நீதிமன்றம் கட்டாயம் உத்தரவு பிறப்பிக்கும் என்று சட்ட வட்டாரங்கள் உறுதியாகக் கூறுகின்றன.

வெறுமனே நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பற்றிய விடயம் என்றால் உயர்நீதிமன்றப் பரிந்துரைக்கு 'பெப்பே' காட்டிவிட்டு, இப்போது நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நிறைவேற்றிய மாதிரி விடயங்களை புரட்டிப் போட்டு, நாடாளுமன்றத்தில் ரணில் அரசு காய் நகர்த்தி விடலாம்.

ஆனால் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை நீக்கம் என்பதால் அதற்கு நிச்சயம் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிடும் என்று நம்பலாம்.

இந்தப் பின்புலத்தில் இப்போது அவசர அவசரமாக 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற மாதிரி நிறைவேற்றுதிகார ஜனாதிபதி முறையை ஒழித்து விட முடியாது. அது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல.

அது, அரசியலை நன்கு புரிந்த கிழட்டு நரித் தந்திரசாலியான ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்கு தெரியும். மற்றைய எல்லோரையும் விட அவருக்கு நன்கு தெரியும். ஆயினும் அந்த வழியை வெட்கமின்றி அவர் நாடுவார்.

அவரைப் பொறுத்தவரை நிறைவேற்றதிகாரஜனாதிபதி முறையைஒழிப்பது முக்கியமல்ல. அதை ஒழிப்பதற்கான முயற்சி என்று காட்டுவதன் மூலம் நாட்டின் ஜனாதிபதித் தேர்தலை இந்த வருடத்தில் நடத்தாமல் தள்ளிப் போடுவதும், ஆட்சிக்கட்டில் தாம் நீடிப்பதும்தான் அவரது இலக்கு.

சரியோ, பிழையோ நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறை நாட்டுக்கு வந்து 45 ஆண்டுகள் கடந்து விட்டன.

90 நடுப்பகுதியில் இருந்தே - கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் - அதனை ஒழித்தல் என்ற பெயரில் பெருத்த எடுப்பிலான அரசியல் முயற்சிகள் பலமுறை முன்னெடுக்கப்பட்டன. ஆயினும் அவற்றையெல்லாம் தாண்டி, அந்த ஆட்சி முறை உறுதியாகவும் தெளிவாகவும் தொடர்கின்றது.

குறிப்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் அந்த பதவி நிலைக்கு கட்டுமட்டில்லாத உச்ச அதிகாரங்கள் குவிக்கப்பட்டன.

காலத்துக்கு காலம் அப்படி சில அதிகாரங்கள் சேர்த்தல், குறைத்தல் என்ற நாடகங்கள் இடம் பெற்றனவே தவிர, அந்த ஆட்சி முறையை அசைக்கவே முடியவில்லை.

இப்போதும் அது அசையாது என்பது உறுதி. அதை அசைக்கும் முயற்சி என்ற பெயரில் தாம் அந்தப் பதவியில் நீடிக்க ரணில் முயல்கின்றார். அதில் கூட அவர் வெற்றி பெறுவது துர்லபமே.



# டில்லி நோக்கி விவசாயிகள் பேரணி பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகம்

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்துவதற்காக டில்லி நோக்கிச் சென்ற பஞ்சாப் விவசாயிகள், ஹரியாணா எல்லையில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

தடையை மீறிச் செல்ல முயன்ற விவசாயிகள் மீது ட்ரோன் மூலம் பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகள் வீசினர். நீர் தாரை பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், ஹரியாணாவின் கானவுரி என்ற இடத்தில் விவசாயிகள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர்.

சம்யுக்தா கிசான் மோர்ச்சா, கிசான் மஸ்தூர் மோர்ச்சா உள்ளிட்ட 200 விவசாய அமைப்புகள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று டில்லி நோக்கி செல்லும் போராட்டத்தில் ஈடுபட திட்டமிட்டிருந்தன.

அதற்கு முன்பாக மத்திய அமைச்சர்கள் கடந்த திங்கள் கிழமை நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. இதனைத் தொடர்ந்து விவசாயிகள் தங்களின் பேரணியை பஞ்சாப்பின் ஃபதேகர் சாஹேப்பில் இருந்து நேற்று காலையில் தொடங்கினர். இப்பேரணி பஞ்சாப் – ஹரியாணா, ஹரியாணா – டில்லி எல்லைகளைக் கடந்து தலைநகரை அடைய வேண்டும்.

விவசாயிகளின் போராட்டத்துக்கு ஆதரவு அளித்த பஞ்சாப் அரசு, அவர்களை ராஜ்புரா புறவழிச்சாலையை கடக்க அனுமதி அளித்தது. இதனைத் தொடர்ந்து தங்களின் டில்லி பயணத்தின் வழியிலுள்ள ஹரியாணாவின் ஆம்பலா எல்லையை விவசாயிகள் அடைந்தனர். விவசாயிகளின் பேரணியை எல்லையிலேயே தடுப்பதற்காக ஏற்கெனவே அங்கே சிமென்ட் தடுப்புகள், முள்வேலிகள் வைக்கப்பட்டிருந்தன. ஹரியாணாவின் ஷம்பு பகுதியை விவசாயிகள் அடைந்ததும் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து விவசாயிகள் தங்களின் ராக்டர்கள் மூலமாக தடுப்புகளை உடைக்க முயன்றனர். இதனால் அங்கே பதற்றம் உருவானது. விவசாயிகள் பொலிஸாரின் பலத்த தடையை மீறி செல்ல முயன்றனர். சிலர் தடுப்புகளை அகற்றினர்.

இதனைத் தொடர்ந்து ஹரியாணா பொலிஸார், விவசாயிகள் மீது கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசினர். கண்ணீர்க் புகை குண்டுகளை வீச ட்ரோன்களும் பயன்படுத்தப்பட்டன. விவசாயிகளைக் கலைக்க இயந்திரங்கள் மூலம் நீர்த் தாரை பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக விவசாயிகள் கற்களை வீசினர்.

காங்கிரஸ் எம்.எல்.ஏ. சக்பால் கைரா ஷம்பு பகுதிக்கு வந்து விவசாயிகளுக்கு ஆதரவு அளித்தார். ஹரியாணாவின் ஜிந்த் பகுதியிலுள்ள கானவுரி என்ற இடத்தில் பஞ்சாப் விவசாயிகளுக்கு பொலிஸாருக்கும் இடையை மோதல் ஏற்பட்டது. பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகள் வீசினர். தடியடியும் நடத்தினர், இதில் இரண்டு பேர் காயமடைந்தனர்.

இதனிடையே, டில்லி நோக்கிச் செல்லும் பஞ்சாப் விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக தமிழகத்தின் திருச்சியில் இருந்து விவசாயிகள் சென்று பேரணியில் கலந்து கொண்டனர். அவர்கள் கைகளில் மண்டை ஓடுகளுடன் வீதியில் படுத்ததும் சிலர் தொலைத்தொடர்பு கோபுரம் மீது ஏறியும் நின்று போரட்டம் நடத்தி ஆதரவளித்தனர்.

மத்திய டில்லியில் துணை இராணுவம் மற்றும் பொலிஸார் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பு காரணங்களுக்காக டில்லி செங்கோட்டை திடீரென பார்வையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு மூடப்பட்டது. மீண்டும் திறப்பதற்கு பாதுகாப்பான சூழல் இருப்பதாக பாதுகாப்பு அமைப்புகள் கருதும் வரையில் இது மூடப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டில்லி – நொய்டா சில்லா எல்லையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. டில்லியில் விவசாயிகள் நடத்தும் பேரணியால் காஜிபூர் எல்லையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.


போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் டில்லிக்குள் நுழைவதைத் தடுக்க காசிபூர், சிங்கு மற்றும் திக்ரி உள்ளிட்ட பல இடங்களில் சோதனை பலப்படுத்தப்பட்டுள்ளது. விவசாயில் நுழைவதைத் தடுக்க பொலிஸார் பல அடுக்கு தடுப்புகளை ஏற்படுத்தியுள்ளதால் தலைநகரில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதனிடையே, ஹரியாணாவில் போராட்டம் நடத்திய விவசாயிகள் மீது கண்ணீர்ப் புகை குண்டுகள் வீசிய நடவடிக்கையை மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கடுமையாக சாடியுள்ளார். இது பா.ஜ.கவின் கொடுமையான தாக்குதல் என்று கண்டித்துள்ளார்.

காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி கருத்து தெரிவிக்கையில், “சுவாமிநாதன் கமிஷன் உத்தரவுப் படி, விவசாயிகளின் பயிர்களுக்கு எம்.எஸ்.பிக்கு சட்டபூர்வமான உத்தரவாதம் அளிக்க காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. இந்த நடவடிக்கை 15 கோடி விவசாய குடும்பங்களின் வளர்ச்சிக்கு உத்தரவாதம் அளிக்கும்” என்று தெரிவித்துள்ளார்.







Letter No.796/Fors.II/2024-1,
Public (Foreigners.II) Department,
Secretariat, Chennai - 600 009.
Dated: 09.02.2024.

From
Thiru. A.Sivagnanam, IAS.,
Additional Secretary to Government.

To
The Foreigners Regional Registration Officer,
Shastri Bhavan, 26, Haddows Road,
Chennai-600 006.

Sir,

Sub: Foreigners – Sri Lankan National – Thiru. Suthenthirarajah, S/o. Thillaiampalam, an inmate of Special Camp at Tiruchirappalli - Temporary Travel Document received from Deputy High Commission of Sri Lanka - Regarding.

Ref: 1. Your order No.19/F/FRRO-CH/2022-1702, dated 11.11.2022.
2. Your letter No.19/F/FRRO-CH/2022-1703, dated 12.11.2022.
3. From the Deputy High Commission for the Democratic Socialist Republic of Sri Lanka in Southern India, Chennai Lr.No. DHC/CONS/A/35/1/2024, dated 02.02.2024.


-------

I am directed to invite your attention to the reference cited and to state that Thiru.Suthendraraja.T @ Santhan, a Sri Lankan National, has been accommodated in the Special Camp, Tiruchirapalli, consequent on the orders issued in the reference 1st cited. In the reference second the Ministry of External Affairs, Government of India, New Delhi has been requested to take necessary action for issuance of Emergency travel document.

2. I am to state that the Deputy High Commission for the Democratic Socialist Republic of Sri Lanka in Southern India, Chennai in its letter 3rd cited has furnished original Temporary Travel Document bearing No.NM8036213, valid till 01.08.2024, issued to Mr.Thillaiampalam Suthenthirarajah, which has been retained in Government. I am to enclose herewith the copy of the temporary travel document received from Deputy High Commission for the Democratic Socialist Republic of Sri Lanka in Southern India, Chennai and to request you to issue necessary orders. A copy of the order in this regard may be conveyed to this Government for further action.

Yours faithfully,

for Additional Secretary to Government



THE DEPUTY HIGH COMMISSION FOR
THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA IN SOUTHERN INDIA
56, Sterling Road, Nungambakkam, Chennai – 600034, Telephone: 044 28241896 / 28252612
Fax: 044 28241894 E-mail: sldhc.chennai@mfa.gov.lk / sldhc.chennai.01@gmail.com

DHC/CONS/A/35/1/2024

02.02.2024

The Secretary to the Government
Public Department
Tamil Nadu Secretariat
Chennai

Dear Sir,

This has reference to the Note Verbale No. I/SLK/415/1/2023 dated 29.11.2023 from the Ministry of External Affairs of the Government of India requesting issuance of travel document for following Sri Lankan national presently under detention at the Special (Detention) Camp, Trichy awaiting deportation to Sri Lanka.

- Thillaiampalam Suthenthirarajah

In this connection, please find forwarded herewith the original temporary travel document, bearing no. NM8036213 of above Sri Lankan national issued by this Mission.

It would be appreciated, if you could acknowledge receipt of the travel documents, expedite the deportation process of above Sri Lankan national at the earliest and keep the Mission informed of the developments.

Please accept Secretary, the assurances of highest consideration.

Harsha Ruparathne
Counsellor
for Deputy High Commissioner


# தற்காலிகக் கடவுச்சீட்டு சாந்தனுக்குக் கிடைத்தது

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழங்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்கான உத்தரவொ பிறப்பிக்கவுள்ளதாக இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தமிழக திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சாந்தன் தாயகத்தில் உள்ள தமது தாயாரை பார்ப்பதற்கு இலங்கை செல்ல அனுமதிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்த நிலையில் இன்றைய தினம் விசாரணை இடம்பெற்றது.

இதன் போது சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்கான தற்காலிக பயண ஆவணத்தை இலங்கை துணைத் தூதரகம் அனுப்பியுள்ள நிலையில், அதனை மத்திய அரசுக்கு அனுப்பிவைத்துள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ஆவணம் கிடைக்கப் பெற்ற பின்னர் இலங்கைக்கு சாந்தனை அனுப்புவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.




(இன்னொரு செய்தி 11ஆம் பக்கத்தில்...)

# சாந்தன் ஒரு வாரத்தில் இலங்கைக்கு வருவதற்கு அனுமதிக்கப்படுவாரென மத்திய அரசு அறிவிப்பு



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலையான சாந்தன் தாயகம் திரும்புவதற்கான தற்காலிக பயண ஆவணத்தை இலங்கை துணைத் தூதரகம் அனுப்பியுள்ளதாக தமிழக அரசு தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதிகளாக இருந்த நளினி, முருகன், சாந்தன் உள்பட ஏழு பேரை விடுதலை செய்து, கடந்த 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உச்ச நீதிமன்ற அறிவுறுத்தலின் பேரில் விடுதலை செய்யப்பட்டனர்.

இதையடுத்து, விடுதலை செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்தவர்களான முருகன், சாந்தன் உள்ளிட்டோர் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், நோய் வாய்ப்பட்டுள்ள தனது தாயை கவனிப்பதற்காக தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்க உத்தரவிடக் கோரி சாந்தன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் சுரேஷ்குமார், குமரேஷ்பாபு ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் முனியப்பராஜ், திருச்சி சிறப்பு முகாமில் இருக்கும் சாந்தனுக்கு இலங்கை திரும்புவதற்கான தற்காலிக பயண ஆவணத்தை இலங்கை தூதரகம் வழங்கியுள்ளது. அந்த ஆவணங்கள் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

அப்போது மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், இதுவரை தங்களுக்கு அந்த ஆவணங்கள் கிடைக்கவில்லை. எனவே, தற்போது நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட ஆவணங்களை மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பதாக தெரிவித்தார். அதனடிப்படையில், சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்கான உத்தரவு ஒரு வாரத்தில் பிறப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்

இதுதொடர்பாக மத்திய அரசு விளக்கம் அளிக்க உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை பெப்ரவரி 29 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

# வெற்றி துரைசாமியின் உடலுக்கு முதல்வர் ஸ்டாலின் நேரில் அஞ்சலி

சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் சைதை துரைசாமியின் மகனும், திரைப்பட இயக்குநருமான வெற்றி துரைசாமியின் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி செலுத்தினார்.

வெற்றி துரைசாமி விலங்குகளைப் படம் எடுப்பதற்காக, தனது நண்பருடன் இமாச்சல பிரதேசத்துக்கு சென்றார். கடந்த 4 ஆம் திகதி மாலை கசாங்நளா பகுதியில் காரில் சென்று கொண்டிருந்தபோது, கார் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை அண்மித்து இருந்த சட்லெஜ் ஆற்றில் கவிழ்ந்துள்ளது.

9 நாள்களாக வெற்றி துரைசாமியின் உடல் தேடப்பட்டு வந்த நிலையில், விபத்து நிகழ்ந்த இடத்தில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில், அவரது உடல் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

இதனையடுத்து வெற்றியின் உடல் சென்னைக்கு கொண்டு வரப்பட்டது. சென்னை சி.ஐ.டி. நகரில் உள்ள இல்லத்தில் வெற்றி துரைசாமியின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

வெற்றி துரைசாமி உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். அவருடன் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், சேகர்பாபு உள்ளிட்டோரும் சென்று அஞ்சலி செலுத்தினர். அஞ்சலி செலுத்திய பின்னர் சைதை துரைசாமி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு முதல்வர் ஸ்டாலின் ஆறுதல் கூறினார்.



வெற்றி துரைசாமி உடலுக்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ், ம.தி.மு.க. தலைவர் வைகோ, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன், உள்ளிட்டோரும் அஞ்சலி செலுத்தினர்.

# செனகலில் ஜனாதிபதி தேர்தல் ஒத்திவைப்பு

## மக்கள் போராட்டத்தை ஒடுக்க இணைய சேவைகள் துண்டிப்பு



மேற்கு ஆபிரிக்க நாடான செனகலில் கடந்த சில வாரங்களில் இரண்டாவது முறையாகவும் இணைய சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய ஜனாதிபதியால் இம்மாதம் நடத்த திட்டமிடப்பட்டிருந்த ஜனாதிபதி தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட மக்களின் எதிர்ப்பை அடக்கும் நோக்கில் இணைய சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

மேற்கு ஆபிரிக்காவின் மிக உயர்ந்த ஜனநாயக நாடு என அழைக்கப்படும் செனகலில் ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்தில் நடத்தாமல் அதனை ஒத்திவைக்க அந்த நாட்டு ஜனாதிபதி மேற்கொண்ட தீர்மானத்தினால் நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் இடம்பெற்றன.

இம்மாதம் நடைபெறவிருந்த ஜனாதிபதி தேர்தலை, டிசம்பர் மாதம் வரை ஒத்திவைக்கும் ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு ஜனாதிபதியின் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினர்.

இதனையடுத்து, நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் ஆரம்பமானதுடன், இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆக பதிவாகியுள்ளது.

தற்போதுள்ள சூழ்நிலையை கட்டுப்படுத்தவும், மக்களின் கருத்துகளை மட்டுப்படுத்தவும் செனகல் அரசாங்கம் நாட்டில் இணையதள சேவையை முடக்கியுள்ளது.

ஜனாதிபதி தமது இரண்டாவது தவணை பதவிக்காலத்தில் நீடிக்கும் உள்நோக்கத்துடன் ஜனாதிபதி தேர்தலை நடத்தாமல் பிற்போட்டுள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

செனகலில் ஜனாதிபதி தேர்தல் எந்த சந்தர்ப்பத்திலும் தாமதமடையவில்லை எனவும், ஜனாதிபதி இந்த தீர்மானத்தை உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும் அந்த நாட்டின் சமயத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேற்கு ஆபிரிக்காவின் நிலையான ஜனநாயக நாடாக செனகல் பெற்றுள்ள நற்பெயருக்கு இந்த நெருக்கடி களங்கத்தை ஏற்படுத்தலாம் என அரசியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



## அமெரிக்க தளம் மீது ஏவுகணை தாக்குதல்

கிழக்கு சிரியாவில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவ தளம் ஏவுகணை தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. ஆனால் சேதம் அல்லது உயிரிழப்புகள் குறித்து உடனடி தகவல் எதுவும் வெளியாகவில்லை.

சிரியாவின் அல்-ஒமர் எண்ணெய் வயல் பகுதியில் அமைந்துள்ள தளத்தை ஏவுகணை தாக்கியது.

இந்த தளம் சமீபத்திய மாதங்களில் தொடர்ச்சியாக ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்களுக்கு உட்பட்டுள்ளது.

கொனிகோ எரிவாயு வயலில் அமைந்துள்ள அதே இராணுவ தளத்தின் மீது இதேபோன்ற தாக்குதல் நடத்தப்பட்ட 2 நாள்களுக்குப் பின்னர் புதிய தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க தளம் மீதான இந்தத் தாக்குதல்களுக்கு இது வரை எந்தக் குழுவும் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## காஸாவின் ரஃபா பகுதியிலிருந்து 1.3 மில்லியன் மக்கள் இடம்பெயர்வு



காஸாவின் ரஃபா பகுதி உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட இடங்களில் ஒன்றாகும் என்று யுனிசெப் தெரிவித்துள்ளது

அதன்படி இங்கு சிறுவர்கள் அதிகமாக உள்ளனர் என்றும் அவர்களில் பலர் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், போரினால் இடம்பெயர்ந்த 1.3 மில்லியன் மக்களில் 6 லட்சம் பேர் சிறுவர்கள் என்றும் அவர்கள் பாதுகாப்பாக செல்வதற்கு இடமில்லை எனவும் யுனிசெப் தெரிவித்துள்ளது.

# வரவு - செலவுத் திட்ட உரையின் இணைப்பாக வரித்திருத்தங்கள் பற்றிய விவரங்கள் வெளியீடு



அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தில், அரசாங்கத்தின் செலவின முன்மொழிவுகளை ஜனாதிபதி தெளிவுபடுத்திய போதிலும், அதற்கான வருமானத்தை ஈட்டும் யோசனைகள் தொடர்பில் அவர் விளக்கமளிக்கவில்லை.

வரவு – செலவு திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வரித்திருத்தங்கள் வரவு செலவுத் திட்ட உரையின் இணைப்பாக வெளியிடப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் தமது வருமானத்தின் மீது தற்போது சுமத்தப்பட்டுள்ள அதிக வரிச்சுமைக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பதே தொழில் வல்லுநர்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாக விருந்தது.

தற்போது, மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் ஈட்டும் ஒருவர், பல்வேறு வருமான வகைகளின் கீழ் 6 வீதம் முதல் 36 வீதம் வரை வரி செலுத்துகின்றார்.

இவ்வாறு வரி செலுத்துபவர்கள், நாட்டின் மொத்த சனத்தொகையில் 20 வீதமானவர்கள் என ஜனாதிபதி சமர்ப்பித்த வரவு – செலவு திட்ட உரையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை ஆரம்பித்து ஒரு வருடத்திற்குள், அதிக வருமானம் ஈட்டுபவர்களில் 20 வீதமானோரின் வரிகளைக் குறைக்குமாறு நிதியத்திடம் அல்லது கடன் வழங்குநர்களிடம் கோருவதில் இலங்கை அதிகாரிகளுக்கு சிக்கல் இருப்பதாக வரவு – செலவுத் திட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், வரவு – செலவுத் திட்டத்தின் இணைப்பில் பல வரித் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதற்கிணங்க, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, வரி தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்காதவர்கள் மீது வழக்குத் தொடர விசேட தண்டனை ஏற்பாடு அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதனிடையே, வங்கியொன்றில் நடைமுறை கணக்கொன்றை ஆரம்பித்தல், கட்டட வரைபடத்திட்டத்தை அங்கீகரித்தல், மோட்டார் வாகனமொன்றைப் பதிவு செய்தல், காணியை அல்லது காணி உறுதிப்பத்திரத்தை பதிவு செய்யும் சந்தர்ப்பங்களிலும் வரி செலுத்துபவரை அடையாளம் காண்பதற்கும் யோசனை முன்மொழியப்பட்டுள்ளது.

பெறுமதிசேர் வரி திருத்தங்கள் தொடர்பாக வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், விலைப்பட்டியல் படிவங்களை ஆணையாளர் நாயகத்தினூடாக வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கலால் வரி தொடர்பில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என வரவு – செலவுத் திட்ட இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் கீழ், ஒன்லைன் உரிமம் வழங்கும் முறையை அறிமுகப்படுத்துதல், போலி அல்லது மோசடி ஸ்டிக்கர்கள் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒரு குழுவை நியமித்தல், புதிய கலால் அனுமதி முறையை அறிமுகப்படுத்துதல், தயாரிப்பு மொத்த, சில்லறை உரிமங்களுக்கு தனியான நிபந்தனைகளை அறிமுகப்படுத்துதல், மதுபான நிலையங்களை திறக்கும் விடயத்தில் திருத்தம் மேற்கொள்ளுதல், சுற்றுலா தொடர்பான விதிமுறைகளில் திருத்தங்கள் என்பன இதில் அடங்குகின்றன.

இதேவேளை, கலால் வரி திணைக்களம் சில மாற்று யோசனைகளையும் முன்வைக்கவுள்ளது.

இதன் கீழ், உள்ளூர் – வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்டு, அனைத்து வகையான உள்ளூர் மதுபானங்களுக்கும் தரநிலைகளை அறிமுகப்படுத்துதல், தற்போதுள்ள கேள்விக்கு ஏற்றவாறு கலால் அனுமதி கட்டணத்தை அதிகரித்தல். வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்ட புதிய மதுபான தயாரிப்புகளில் முதலீட்டை ஊக்குவித்தல், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தெரிவு செய்யப்பட்ட மதுபானங்களை தீர்வை வரியற்ற கடைகளில் விற்பனை செய்ய அனுமதித்தல் என்பன இதன் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சுங்கத் திணைக்களத்தின் செயற்பாட்டுத் திறனை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் முன்மொழியப்பட்டுள்ளது.

# இணையவழிக் காப்பு சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய அனுமதி

இணையவழிக் காப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இணையவழிக் காப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலமொன்றை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தச் சட்டத்துடன் தொடர்புடைய சில திருத்தங்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அமைச்சரவைக்கு 30 இற்கும் மேற்பட்ட திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பல்வேறு தரப்பினரின் எதிர்ப்பைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சமூக ஊடக வலையமைப்புகளுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இந்தத் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள் என என அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டுள்ளார்.

பல தரப்பினரும் இந்த சட்டத்தின் பல பிரிவுகளை விமர்சித்திருந்தனர்.

எனினும் பெப்ரவரி முதலாம் திகதி நாடாளுமன்றத்தில் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

# 'அஸ்வெசும' திட்டத்தின் 2 ஆம் கட்டத்திற்கான விண்ணப்பம் கோரல் நாளை தொடங்குகின்றது

அஸ்வெசும நலன்புரி வேலைத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பம் கோரல் நாளை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இதனைத் தெரிவித் துள்ளார்.

அஸ்வெசும நலன்புரி வேலைத் திட்டம் தொடர்பில், மாகாண ஆளுநர்



மற்றும் பிரதம செயலாளர்களுக்கு தெளிவூட்டுவதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று நிதியமைச்சில் இடம்பெற்ற போது அவர் மேற்கண் டவாறு குறிப்பிட்டுள்ளார்.

முதலாம் கட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்திப்பதன் ஊடாக, இரண்டாம் கட்டத்தை நிறை வுறுத்தும் போது அஸ்வெசும நலன்புரி திட்டத்தை வழங்க எதிர்ப்பார்க்கப் பட்டுள்ளது.

# வர்த்தக நிலைய ஊழியர் மீது வவுனியாவில் கத்திக்குத்து!

(வசந்தன்)

வவுனியா, கோவில்குளம் பகுதியில் இளைஞர் ஒருவர் மீது கத்திக்குத்து இடம்பெற்றுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வவுனியா, முதலாம் குறுக்குத்தெருப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பணியாற்றியுள்ளார். இரவு அந்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளரின் கோவில்குளம் பகுதியில் உள்ள வீட்டில் தங்கி நின்றுள்ளனர்.



வர்த்தக நிலைய உரிமையாள ருக்கும், அங்கு பணியாற்றுபவருக்கும் இடையில் நேற்றுக் காலை ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து வர்த்தக நிலைய உரிமையாளர் தன் மீது கத்தியால் பல இடங்களில் குத்தினார் எனப் பாதிக் கப்பட்டவர் வவுனியா பொலிஸாரிடம் தெரிவித்தார்.

காயமடைந்த சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

## பெரிய வெங்காயம் உள்ளிட்ட

# ஆறு வகையான பயிர்களுக்கு இலவச காப்புறுதி கிடைக்கும்

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பெரிய வெங்காயத்திற்கு இலவச காப்புறுதி வழங்க விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையினூடாக 6 வகை பயிர்களுக்கு விவசாய காப்புறுதி இலவசமாக வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள் ளது.

இதற்கமைவாக நெல், மிளகாய், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, சோளம், சோயா ஆகிய பயிர்களுக்கு இலவச காப்புறுதி வழங்கப்பட வுள்ளது.



காட்டு யானைகள், வறட்சி, அதிக மழையால் ஏற்படும் சேதங்களுக்கு மாத்திரம் இந்த காப்புறுதி வழங்கப் படவுள்ளது.

ஏனைய பயிர்களுக்கு பயிர்ச்சேத இழப்பீட்டின் கீழான காப்புறுதி வழங்கப்ப டும் என விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

# பெலியத்த ஐவர் சுட்டு கொலை சம்பவம்: 14 சந்தேகநபர்களுக்கும் விளக்கமறியல்

தெற்கு அதிகவேக வீதியின் பெலியத்த நுழைவாயில் பகுதியில் துப்பாக்கிச் சூட்டை நடத்தி 5 பேரை கொலை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 14 சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி சந்தேகநபர்கள் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள எதிர்வரும் பெப்ரவரி 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



கடந்த மாதம் 22 ஆம் திகதி தெற்கு அதிகவேக வீதியின் பெலியத்த நுழைவாயில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமது மக்கள் சக்தி கட்சியின் தலைவர் உள்ளிட்ட ஐவர் பேர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வைப்பு நிதியின் வட்டியைச் செலுத்த இலங்கை மின்சார சபை நடவடிக்கை

புதிதாக மின்சார விநியோகத்தை வழங்குவதற்காக, நுகர்வோரிடம் இருந்து அறவிடப்படும் வைப்பு நிதியின் 2023 ஆம் ஆண்டுக்கான வட்டியை செலுத்துவதற்கு தயாராகவுள்ளதாக இலங்கை மின்சார சபை உயர் நீதிமன்றிற்கு அறியப்படுத்தியுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி நுகர்வோர் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனு, மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயத்தின் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



இதன்போது, இலங்கை மின்சார சபை சார்பில் மன்றில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலன் விக்னேஸ்வரன், புதிய மின்சார இணைப்புக்காக, நுகர்வோரிடம் இருந்து அறவிடப்படும் வைப்பு கட்டணத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான 11.67 சதவீத வருடாந்த வட்டியை செலுத்த தயாராக இருகின்றோம் என அறிவித்துள்ளார்.

# ஜனாதிபதி தேர்தலையும் குழப்பியடிக்க எத்தனம் என்கின்றார் டிலான் பெரேரா!

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் தோல்வியடைவது உறுதி என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்கு அறிவார். ஆகவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ரத்துச் செய்வதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கு அரசமைப்பு ஊடாகவே தடைகளை ஏற்படுத்துவார்.

ஜனாதிபதியின் அரசியல் தந்திரத்தை நன்கு அறிவோம் எனச் சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடுவார் எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஏனைய பிரதான எதிர்க் கட்சிகளும் ஆளுங்கட்சியும் தமது ஜனாதிபதி வேட்பாளரை இதுவரை அறிவிக்கவில்லை.



அரசாங்கத்தில் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை வகிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். ஆனால் அமைச்சு பதவிகள் இல்லாத பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கக் கூடாது என்று குறிப்பிட்டுள்ளமையை அறிய முடிகிறது.

ராஜபக்ஷர்கள் எவரையும் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கும் நிலை தோற்றம் பெற்றுள்ளதால் ஜனாதிபதி தேர்தல் குறித்து எவ்வித தீர்மானங்களையும் எடுக்க முடியாத இக்கட்டான நிலைக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் படுதோல்வி அடைவது உறுதி என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்கு அறிவார். ஆகவே எந்த வழியிலாவது தேர்தலை பிற்போடுவதற்கு அவர் விசேட கவனம் செலுத்துவார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்வதற்கு தற்போது முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்வதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஜனாதிபதியின் அரசியல் தந்திரத்தை நாங்கள் நன்கு அறிவோம். ஆகவே ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடும் முயற்சிக்கு நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது. - என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.02.2024




இன்று நீங்கள் செய்யும் எந்தச் செயலிலும் உணர்ச்சி வசப்பட வேண்டாம். நிதானமாகச் செயல்படுவதன் மூலம் நீங்கள் எதிர்மறை விளைவுகளைத் தவிர்க்கலாம். இன்று நீங்கள் வெளியிடங்களுக்குச் செல்வதன் மூலம் மனம் அமைதியடையும்.

இன்று தொழிலில் முன்னேற்றத்துக்கான வாய்ப்பு இல்லை. பணியில் சுமை அதிகமாக இருக்கும். பணியில் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ளவும்.

உங்கள் மனநிலையில் ஏற்படும் மாறுபாடு காரணமாக உங்கள் துணையிடம் மகிழ்ச்சியை வெளிப்படுத்த மாட்டீர்கள். உங்கள் துணையுடன் யதார்த்தமாகவும் சந்தோஷமாகவும் இருப்பது நல்லது.

செலவுகள் சற்று அதிகமாகக் காணப்படும். பணத்தை சிக்கனமாகக் கையாளவும். தேவையற்ற செலவுகளைக் குறைக்கவும்.




சூழ்நிலைக்குத் தக்கவாறு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். எந்த ஒரு விஷயத்தையும் பக்குவமாக அணுகுவதன் மூலம் வேறுபாடுகளைத் தவிர்க்கலாம்.

பணியில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணிச்சுமை அதிகமாகவும் கவலை தருவதாகவும் இருக்கும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சிக்கல்கள் இருக்கும். அதனால் உங்கள் மகிழ்ச்சி பாதிக்கப்படலாம்.

நிதிநிலையில் அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும். நிதிசம்பந்தமான விஷயங்களை கவனமாகக் கையாள வேண்டும்.

கண்களில் ஏற்படும் எரிச்சல் பாதிப்புகளை உண்டாக்கும் என்பதால் அதன் தீவிரத்தை உணர்ந்து கவனமாக இருக்க வேண்டும். அஜீரணக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு




இன்று உங்களுக்கு மிகவும் முன்னேற்றமான நாளாக அமையும். வாழ்க்கையின் யதார்த்தத்தை உணர்ந்து புதிய அனுபவங்களின் மூலம் நீங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படும் நாள்.

உங்கள் பணி மற்றும் தொழிலில் முன்னேற்றமான பலன்கள் காணப்படும். உங்களது செயல்திறனில் திருப்திகரமான நிலை இருக்கும்.

இன்று கணவன் மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நல்ல புரிந்துணர்வுடன் இருப்பீர்கள். இனிமையான விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்றைய நாள் உங்களுக்கு இலாபகரமான நாளாக அமையும். பணத்தை உபயோகமான விஷயத்துக்கு பயன்படுத்துவீர்கள். நீங்கள் தன்னம்பிக்கையுடனும் அமைதியுடனும் காணப்படுவீர்கள். இது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும் நாள். ஊக்கம் மற்றும் உற்சாகத்துடன் காணப்பட்டு உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள் அனைத்து விதத்திலும் இன்று வளமான நாள்.

புதிய வாய்ப்புகள் அமைந்து வளர்ச்சிக்கு வழி வகுக்கும். பணி மற்றும் தொழில் மகிழ்ச்சி தரக்கூடியதாகவும் திருப்தி அளிக்கத் தக்க வகையிலும் காணப்படும்.

உங்கள் வாழ்க்கைத் துணையுடன் மகிழ்ச்சியாக வெளியே செல்வீர்கள். சந்தோஷத்தை அனுபவிக்கும் நாளாக அமையும்.

வருமானம் அதிகரிப்பதற்கான சாத்தியம் உள்ளது. நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும். இன்று ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கான சூழ்நிலை காணப்படுகிறது. தேவையற்ற விஷயங்கள் சிந்திப்பதை தவிர்க்கவும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

வேலையில் கூடுதல் கவனம் செலுத்தவும். பணியில் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று எளிதில் உணர்ச்சி வசப்படும் நாளாக இருப்பதால் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் நட்புறவுடன் நடந்து கொள்ள முயற்சி செய்யவும்.

கவனச் சிதைவால் பண இழப்புகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. தேவையற்ற செலவுகள் செய்ய நேரிடும். எனவே செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

மன அழுத்தத்தின் காரணமாகத் தலைவலி ஏற்படலாம்.




இன்று உங்கள் தன்னம்பிக்கையும் உற்சாகமும் குறைந்து காணப்படும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பணிச் சுமை அதிகமாக இருக்கும். தவறுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் பணிகளை திட்டமிட்டுச் செய்ய வேண்டும்.

உங்கள் வாழ்க்கை துணையாரால் புறக்கணிக்கப்படுவதாக உணர்வீர்கள். பரஸ்பர உரையாடல் மற்றும் புரிந்துணர்வு மூலம் அதை தீர்க்கலாம்.

இன்று பண பரிவர்த்தனையில் சற்று சிரமங்கள் ஏற்படும். தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரிடும். தேவையற்ற கவலைகளின் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்பு காணப்படுகின்றது ஆரோக்கியமாக இருப்பதற்கு மனதை நிலையாக வைத்திருங்கள்.




இன்று சந்தோஷமான சூழ்நிலை காணப்படும். நீங்கள் வெற்றி பெற வேண்டும் என்ற உறுதியுடன் இருப்பீர்கள். விரைவான முடிவு எடுப்பதற்கான அநுகூலமான மனநிலையுடன் காணப்படுவீர்கள்.

இன்று பணியை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் உணர்வுகளைச் சக பணியாளர்களுடன் பகிர்ந்து கொள்வீர்கள். விருந்துகளில் கலந்து கொள்வீர்கள்.

உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் விழாவைப்பற்றி உங்கள் துணையாருடன் கலந்தாலோசிப்பீர்கள். அதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று உங்கள் சேமிப்புகளை அதிகரித்துக்கொள்ளும் நல்ல வாய்ப்பு இருக்கின்றது. உங்கள் நெருக்கமானவர்களுடைய விருந்தில் கலந்து கொள்ள பணத்தைச் செலவிடுவீர்கள்.




எளிதில் வெற்றி கிடைக்க சாத்தியம் உள்ளது. உங்கள் திறமையான தகவல் தொடர்பின் மூலம் மற்றவர்களை மகிழ்விப்பீர்கள். உங்கள் அணுகுமுறை வெற்றிச் சிகரங்களைத் தொட உங்களுக்கு உதவும்.

இன்று சவாலான பணிகளை எளிதில் எதிர்கொள்வீர்கள். உங்கள் பணிகளை எளிதில் விரைந்து முடிப்பீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையாருடன் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் நட்பான அனுகுமுறை அவருக்கு திருப்திகரமானதாக இருக்கும்.

இன்று கையிருப்பு பணத்தைக் கொண்டு வசதியாக இருப்பீர்கள். உங்கள் பணத்தை பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவீர்கள். இன்று மன உறுதியின் காரணமாக ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.02.2024

## தனுசு

சற்று மந்தமான நிலை காணப்படும். இலக்கில் வெற்றி காண்பதைக் கடினமாக உணர்வீர்கள். மன அழுத்தத்தை போக்க யோகா அல்லது தியானம் மேற்கொள்வது நல்லது.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும் நாள். அதிக வேலை காரணமாக அதை முடிப்பதில் சிரமும் எரிச்சலும் இருக்கும்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் வாழ்க்கைத் துணையாரின் தவறுகளை சுட்டிக்காட்டுவீர்கள்.

இன்று பணவரவுக்கான சாதகமான சூழ்நிலை இல்லை. அதனால் சேமிப்பும் இருக்காது.

இன்று ஆரோக்கியம் ஊக்கமளிக்கும் வகையில் இருக்காது. சளி மற்றும் தலைவலி உபாதைகள் ஏற்படலாம்.

## கும்பம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். புதிய மனிதர்கள் மற்றும் புதிய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அவர்களை சந்திப்பதன் மூலம் உங்கள் மனதில் மகிழ்ச்சியும் நிறைவும் ஏற்படும்.

பணியிடத்தில் சந்திப்புகளின் பொழுது நீங்கள் புதுமையான கருத்துக்களைக் கூறுவீர்கள். இதை உங்கள் மேலதிகாரிகள் ஒப்புக்கொண்டு பாராட்டுவார்கள்.

உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணப் புழக்கம் சிறப்பாக காணப்படும். உங்களால் சேமிப்பை உயர்த்த முடியும். உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சியான மனநிலை காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## மகரம்

இன்றைய நாள் உங்கள் முற்போக்கான வளர்ச்சிக்கு சாதகமாக இல்லை. எதையும் சமநிலையோடு அணுக வேண்டும் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்திச் சவால்களைச் சமாளிக்க வேண்டும்.

இன்று கவனக் குறைவு ஏற்பட வாய்ப்புள்ளதால் பணிகளைக் கவனத்துடன் செய்ய வேண்டும். உங்கள் பணியைத் திறம்படச் செய்வதற்கு உங்கள் சக பணியாளர்களின் அறிவுரையை ஏற்று அதன் படி செயல்பட வேண்டும்.

இன்று பதற்றத்துடன் காணப்படுவீர்கள். அதன் விளைவாகக் காரணமே இல்லாமல் உங்கள் துணையிடம் குற்றம் கண்டுபிடிப்பீர்கள்.

இன்று பண வரவு சுமாராக இருக்கும். இன்று நிதிநிலையை மேம்படுத்துவதற்கான அதிர்ஷ்டம் இல்லை.

## மீனம்

அசௌகரியங்கள் காணப்படும். சவால்களை சமாளிக்க இன்று நீங்கள் உங்கள் பணிகளைத் திட்டமிட வேண்டும். தளரா நம்பிக்கையுடன் தேவையற்ற எண்ணங்களிலிருந்து விடுபடவேண்டும்.

இன்று பணியிடச் சூழல் சாதகமான பலன்களைக் கொடுக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. அனுசரனையான போக்கை மேற்கொள்வதன் மூலம் உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவுக்கான சாத்தியம் இல்லை. உங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு உங்கள் பணத் தேவைகளைச் சமாளிப்பதைக் கடினமாக உணர்வீர்கள்.

தலைவலி வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.





# காதலர் தினம் எப்படி வந்தது?

உலகம் முழுவதும் அனைத்து ஜீவராசிகளுக்கும் உள்ள ஒன்று தான் காதல். அப்பாவின் பாசம், அம்மாவின் பாசம், குழந்தைகள் மீதான பாசம், நண்பர்கள், உறவினர்கள் என ஒவ்வொருவரின் மீதும் ஒவ்வொரு விதமாக உள்ள பாசம் கலந்த காதலை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. உணர்வு பூர்வமாக அனுபவிக்கும் காதலை அனைவரும் கொண்டாடும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 14 ஆம் திகதி காதலர் தினம் கொண்டாடப்படுகிறது.

இந்த நாளுக்கு ஒரு வாரத்துக்கு முன் இருந்தே கொண்டாட்டங்கள் தொடங்குகின்றன. இந்த நாளை நாமும் நமக்குத் தெரிந்தப் படி கொண்டாடுகிறோம். ஆனால் இந்த நாள் ஏன் கொண்டாடப்படுகிறது? என்பது குறித்து யோசித்து இல்லை. இதோ காதல் தினத்தின் வரலாறு மற்றும் சிறப்பம்சம் குறித்து இங்கே அறிந்துக் கொள்வோம்.

காதலர்தினம்கொண்டாடுவதற்கான காரணங்கள் எதுவும் சரியாகத் தெரியவில்லை என்றாலும், ரோமானியப் பேரரசில் இருந்து காதலர் தினம் கொண்டாடப்படுவதாக வரலாறுகள் கூறுகின்றன. ரோம பேரரசரான இரண்டாம் கிளாடியுஸ் காலத்தில் ஆண்கள் திருமணம் செய்துக் கொண்டால் அவர்களின் வீரம் குறைந்துவிடும் என்பது அந்த நாட்டு அரசரின் எண்ணமாக இருந்துள்ளது. எனவேதான் அந்த நாட்டில் உள்ள ஆண்கள் திருமணம் செய்துக் கொள்வதற்குத் தடை விதித்தார்.

இந்தச் சூழலில் தான், திருமணம் செய்துக் கொள்ள வேண்டும் என்ற நினைப்பில் இருந்த ஆண்களுக்கு வலண்டைன் எனும் பாதிரியார் திருமணம் செய்த வைத்துள்ளார்.

இதனையறிந்த மன்னன் வலண்டைனை கைது செய்த்தோடு, மரண தண்டனையை நிறைவேற்ற நாளும் நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால், இதற்கிடையில் சிறைக் காவலரின் பார்வை இழந்த மகள் அஸ்டோரியசுக்கும் வலண்டைனுக்கும் இடையே காதல் ஏற்பட்டுள்ளது. சிறைக் காவலருக்கு இது தெரியவர அஸ்டோரியசை வீட்டுக் காவலில் வைத் தான். அப்போது தான் வலண்டைன் அஸ்டோரியசுக்கு தனது முதல் காதல் வாழ்த்து அட்டை மூலம் செய்தி அனுப்பினார்.

இதே நேரத்தில் தான் வாலண்டைன் கல்லால் அடிக்கப்பட்டு, சித்தரவை செய்யப்பட்டு, தலை துண்டிக்கப்பட்ட நிலையில் கொல்லப்பட்டார். அந்தநாள் கி.பி.270, பெப்ரவரி 14 ஆம் நாள். இந்த நாளை வலண்டைன் தினமாக அதாவது காதலர் தினமாகக் கொண்டாடி வருகின்றனர்.

இது பொதுவான விஷயமாக இருந்தாலும், ஒவ்வொரு நாடுகளும் ஒவ்வொரு விதமான வரலாறுகளுடன் இந்த நாளைக் கொண்டாடுகின்றன.



## தினமும் காதலர் தினமே...!

வரிகளில்
இல்லாத ரசனை
உன்னிரு விழிகளில்
உணர்ந்தேன்...!

நீ விடைபெறும்
போதெல்லாம்
என்னிடம்
தாவிக்கொள்கின்றது
சிறு குழந்தையாய்
உன் நினைவுகள்...!

சுதந்திரமான மனதும்
சுயநலமாகி போனது
உனதன்பு எனக்கே
எனக்குமட்டும்
சொந்தமென்று...!

மாட்டிய கொலுசில்
மனசையும் கோர்த்து
விட்டாயா
ஒலிக்குமிசையில்
உன்பெயர் கேட்குதே!

உறங்காத கண்களும்
உறங்கிப்போனது
உன் நெஞ்சமெனும்
பஞ்சணையில்

உளிகொண்டு
பார்வையில்
செதுக்குகின்றாய்
சிலையாகின்றேன்
நானும்...

கண்களில் தொடங்கி
கட்டிலறையில்
முடிவதல்ல காதல்
மனதில் மலர்ந்து
மணவறை சென்று
மரணம்வரை
உடனிருப்பதே
உண்மை காதல்

உன்னில் நானும்
என்னுள் நீயுமாக
வாழும் நமக்கு
தினமும் காதலர் தினமே!

## உன் அன்பில் தொலைந்து...!

பார்க்க
மறுத்த விழிகளும்
காத்துக்கிடக்கிறது...
உன் அன்பில்
தொலைந்து...!

இடைவெளி
வலியை தருமென
தெரிந்தும் பிடிவாதமாய்
அனுபவித்திருக்கிறோம்
இருவரும்...!

உலகை
காட்டியது
பெற்றோரென்றால்
அதை
உணர வைத்தது...
ரசிக்க வைத்தது...
நீ...!

தூரம் வலியை
கொடுத்தாலும் சுகமே!
நினைவுகள்
உன்னை சுற்றியே
இருப்பதால்...!

## தித்திக்கும் உன் நினைவுகள்...

நினைவு கடலில்
நீந்துகின்றேன்
கரை சேர்த்திட
வருவாயென...!

நம்மை
நனைத்த மழைத்துளி
உலர்ந்தபோதும்
நாம்...
நினைவுத்துளி
இன்னும் ஈரமாகவே
மனதில்...!

தித்திக்கும்
உன் நினைவுகளை
சந்திக்கும் போது
காத்திருக்கும்
வலிகள் கூட
காணாமல்
போகின்றன

என் கனவுகள்
நீயாக இருக்கும்வரை
என் கவிதைகள்
உன் பெயர் சொல்லும்...

# காதலர் தினத்தில் அன்பைக் கொடுங்கள்!

பெப்ரவரி மாதம் என்றதுமே பெரும்பாலானவர்களின் நினைவுக்கு வருவது காதலர் தினம்தான். பெப்ரவரி 14 ஆம் திகதியைக் காதலர் தினமாக கொண்டாடி வருகின்றனர்.

அன்றைய தினத்தில் காதலர்கள் ஒருவருக்கொருவர் தங்களது அன்பை வெளிப்படுத்த பரிசுகளை கொடுப்பது வழக்கமே.

பரிசுப் பொருளானது என்றென்றும் நீங்கா நினைவுடன் துணைக்குப் பிடித்த மாதிரியாக இருக்க வேண்டும் என்பதில் ஒவ்வொருவரது தெரிவும் இருக்கும்.

பலருக்கும் என்ன கொடுக்கலாம் என்பதில் குழப்பம் நீடிக்கலாம். இந்தப் பதிவில் என்னென்ன பொருள்களைக் கொடுக்கலாம், எதை கொடுக்கக் கூடாது என்பது பற்றித் தெரிந்து கொள்வோம்.

பொதுவாகப் பெண்களுக்குப் மோதி ரம் பிடிக்கும் என்பதால் மோதிரத்தைப் பரிசளிக்கலாம். விரைவில் திருமணம் என்ற அர்த்தத்திலும் அப்பரிசை வழங்கலாம்.

இதுதவிர வாசனை திரவியங்கள், கைகளை அலங்கரிக்கும் வாட்ச், ரோஸ் லேம்ப் என வசீகரமான பொருள்களையும் வழங்கலாம். வெறும் பரிசாக மட்டுமல்லா மல் இரவு உணவும் உங்கள் துணையை சந்தோஷப்படுத்தும். காதலுடன் அவர்க ளுக்கு பிடித்த உணவை ஊட்டிவிட்டும் அன்பை வெளிப்படுத்தலாம்.

இது ஒருபுறம் இருக்க, கொடுக்கக் கூடாத பரிசுகள் பற்றியும் தெரிந்து கொள்வோம். தாஜ்மஹால் காதலின் சின்னமாக இருந்தாலும் அது மும்தாஜின் கல்லறை என்பதால் தாஜ் மஹாலை கொடுக்கக் கூடாது என்று சொல்லப்படுகிறது.

கைக்குட்டை வழங்குவதும் கசப்பை ஏற்படுத்துமாம். இது போன்று காலணிகளும் எதிர்மறையாக பார்க்கப்படுவதால் பரிசாக அளிக்க வேண்டாம் என சொல்லப்படுகிறது. மிக முக்கியமாகக் கருப்பு நிற ஆடைகள் கொடுப்பதையும், அணிவதையும் இன்றைய நாளில் தவிர்த்து விடுங்கள். அன்பை அள்ளிக்கொடுங்கள்.

## உன் நினைவுகள் என் அருகில்...!

மனதுக்குள்
மலர்ந்தாய்
மலராய்....
மனமெங்கும்
மணக்கின்றது
உன் வாசனை....

விழிகள்
காத்திருப்பதும்
உனக்காக...
கண்ணீரும்
உனக்காக...

என் தேடல்களில்
எப்போதும் முதலிடம்
உன் நினைவுகளுக்கே...

உன் காத்திருப்புக்கள்
எனக்காக மட்டுமே
என்பதில் நானும்
சுயநலக்காரிதான்...

ஆர்ப்பாட்டங்கள் இல்லாத
உன் அன்புக்கு
அடிமையானேன் நான்...

நீயில்லா
நேரங்களில்
உன்
நினைவுகளைத்தவிர
வேறெதற்கும்
அனுமதியில்லை
என்னருகில்......

## என் இதயம் துடிப்பது உன்னால் அல்லவா!

நீ...
தூரமாக இருந்தாலும்
உனது குரலை
கேட்காத நொடிகள் இல்லை!
கேட்கிறேன்...
இதய துடிப்பில்...!
ஏனென்றால்...
என் இதயம் துடிப்பது
உன்னால் அல்லவா!

கொஞ்சும்
உன் வார்த்தைகளில்
என் கோபங்களும்
மறைந்து விடுகின்றன!
சதா...
மழைச்சாரலாய்
நீ வர...
கவிச்சோலையானேன்
நான்...!

காற்றோடு
பேசும் மலராய்
உன் மனதோடு
பேசுகிறேன்
நான்...!

நான்
மறைந்தாலும்
உன் மனதில்
மறக்கப்படாது
நான்...
ஆழவேண்டும்
உன் மனதை...!
அந்த அழகிய வாழ்வை
வாழ்ந்திட வேண்டும்!

- காதல்நாயகி.

